www.tamilarangam.net

9 இலங்கைத் தமிழர்களை இத்தாலியப் பொலிசார் கைது செய்துள்ளனர்

செய்தி

**ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்கத் தயார்: செ.பத்மநாதன்**

[ திங்கட்கிழமை, 18 மே 2009, 02:10.19 AM GMT +05:30 ]



நாம் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கு தயாராக இருக்கின்றோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செல்வராஜா பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் இருப்பது என்பது சரணடைவதோ ஆயுதங்களைக் கையளிப்பதோ அல்ல. அப்பகுதியில் படுகாயமடைந்திருக்கும் 25 ஆயிரம் மக்களையும் பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கை எனவும் லண்டனில் இருந்து ஒளிபரப்பாகும் பிரபல தொலைக்காட்சிச் சேவையான 'சனல் - 4' தொலைக்காட்சிக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை அளித்த பிரத்தியேகப் பேட்டியின்போது பத்மநாதன் தெரிவித்தார்.

அவரது பேட்டியின் விபரம்:

**விடுதலைப் புலிகளின் பிந்திய நிலைப்பாடு என்ன?**

எமது அமைப்பு ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்பதற்குத் தயாராகவிருக்கின்றது.

**எவ்வளவு போராளிகள் அங்கு இருக்கின்றார்கள்?**

2 ஆயிரத்துக்கும் குறைவான போராளிகள்தான் அங்குள்ளனர். நாம் போரை நிறுத்திக்கொள்ளத் தயாராகவிருக்கின்றோம். எமது மக்கள் செத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு மணித்தியாலமும் நூற்றுக்கும் அதிகமானவர்கள் மரணமடைந்து கொண்டிருக்கின்றார்கள். நேற்றில் இருந்து 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். 25 ஆயிரம் பேர் படுகாயமடைந்திருக்கின்றார்கள்.

**அவர்கள் பொதுமக்களா?**

ஆம்.

**சிறிலங்கா அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என நீங்கள் கேட்கின்றீர்கள்?**

போரை நிறுத்துவது தொடர்பாகவும், உடனடிப் போர் நிறுத்தம் தொடர்பாகவுமே நாம் நேற்று தொடக்கம் பேசிக்கொண்டிருக்கின்றோம். நாம் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்கு தயாராக இருக்கின்றோம்.

**இந்த போர்கள் எல்லாவற்றுக்கும் பின்னர் போர் இப்போது முடிவுக்கு வந்துவிட்டதா?**

ஆம். நாம் இந்த போரை நிறுத்திக்கொள்வதற்கே விரும்புகின்றோம்.

**நீங்கள் என்ன சொல்ல வருகின்றீர்கள்... விடுதலைப் புலிகள் கெரில்லா போர் போன்ற முறைகளில் தமது சண்டையைத் தொடர்வார்களா?**

நான் நினைக்கின்றேன், கடந்த 38 வருட காலமாக நாம் போராட்டத்தை நடத்திவருகின்றோம். நாளாந்தம் மனித உயிர்கள்தான் இதில் பலியாகி வருகின்றன. இன்னும் 30 வருடங்களுக்கு இது தொடர்ந்தால்... நான் அதனை நம்பவில்லை. தமிழ் மக்களுக்கு சமாதான வழிமுறைகளில் தீர்வைக்காண வேண்டும் என்றே நாம் நம்புகின்றோம்.

**புலிகள் தலைவர் பிரபாகரனிடம் இருந்து எவ்வாறான உத்தரவுகள் வந்திருக்கின்றன?**

பிரபாகரன்தான் உண்மையில் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார். நான்கு மணித்தியாலமாக நான் அவருடன் பேசினேன். அவர்தான் இந்தச் செய்தியை சிறிலங்கா அரசாங்கத்துக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் தந்திருக்கின்றார். அதற்கான பதிலுக்காக நாம் காத்திருக்கின்றோம். இதுவரையில் இதற்கான பதிலை யாரும் தரவும் இல்லை. யாரும் போரை நிறுத்தவும் இல்லை.

**பிரபாகரன் இப்போதும் அந்தப் பகுதியிலா இருக்கின்றார்?**
ஆம்.

**நீங்கள் அவருடன் பேசியுள்ளீர்கள். அவர் சரணடையத் தயாராகவிருக்கின்றாரா?**

சரணடைவதல்ல. நாம் ஆயுதங்களைக் கீழே போடுவோம். கையளிக்கப்போவதில்லை.

**ஏன் கையளிக்க மாட்டீர்கள்?**

உண்மையில் இது பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது. நாம் விடுதலைப் போராட்டத்துக்காகவே ஆயுதங்களைத் தூக்கினோம். அவற்றை ஏன் கையளிக்க வேண்டும்?

**விடுதலைப் புலிகள். ஏன் இவ்வளவு மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தியது? அவர்களை வெளியே செல்ல ஏன் அனுமதிக்கவில்லை?**

நாம் பொதுமக்களை ஒருபோதும் எம்மிடம் வைத்திருக்கவில்லை. அந்தப் பொதுமக்கள் எங்களுடைய உறவினர்கள் அல்லது குடும்பத்தவர்கள். அல்லது சிறிலங்கா இராணுவம் தமக்குப் பாதுகாப்பை ஒருபோதும் தராது என நம்புபவர்களாக அவர்கள் இருக்கலாம். முகாம்களுக்குச் செல்வதற்கு அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் சிறிலங்கா


இன்றைய செய்தி - 08, மே 2010 சனிக்கிழமை

| வெள்ளிக்கிழமை | வியாழக்கிழமை | புதன்கிழமை |
|---|---|---|
| செவ்வாய்க்கிழமை | திங்கட்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |

sponsor




advertisements











சிறப்புச் செய்திகள்

**இத்தாலியில் பணியாற்றி நாடு திரும்பிய நபர், பாதாள உலகக் குழுவின் துப்பாக்கிச் சூட்டில் பலி**

[ வெள்ளிக்கிழமை, 07 மே 2010, 02:13.32 PM ]



இத்தாலியில் நீண்ட காலம் பணியாற்றி நாடு திரும்பிய நபர் ஒருவர் பாதாள உலகக் குழுவின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். [மேலும்]

**மானிப்பாயில் கடத்தப்பட்ட மாணவி மயக்கமுற்ற நிலையில் மீட்பு**

[ வெள்ளிக்கிழமை, 07 மே 2010, 11:06.59 AM ]



யாழ்ப்பாணம் மானிப்பாயில் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட மாணவி மயக்கமுற்ற நிலையில் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன. [மேலும்]

(6ம் இணைப்பு)

**பிரித்தானியத் தேர்தல் எதிர்க்கட்சியான கான்சர்வேட்டிவ் கட்சி ஆகக்கூடுதலான இடங்களை பெற்றிருக்கிறது. - தமிழர்களுக்கு ஆதரவான வேட்பாளர்களின் முடிவுகள்**

[ வெள்ளிக்கிழமை, 07 மே 2010, 10:03.51 AM ]



பிரித்தானியாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் முடிவுகள் வெளியாகிவரும் நிலையில், தமிழ் மக்களிற்கும், அவர்களின் விடுதலைக்கும் ஆதரவானவர்களின் முடிவுகள் தொடர்பாக பிரித்தானியத் தமிழ் மக்கள் மிக உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். [மேலும்]

**அமிதாப் பச்சன் வருவதனை யாராலும் தடுக்க முடியாதாம் - அரசாங்கம்**

[ வெள்ளிக்கிழமை, 07 மே 2010, 09:14.36 AM ]



இலங்கையில் நடைபெறவுள்ள திரைப்பட விருது வழங்கும் விழாவிற்கு அமிதாப்பச்சன் குழுவினர் நிச்சயம் கலந்து கொள்வார்கள் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. [மேலும்]

**லெப்.கேணல் சந்திரன் பூங்காவை அழித்த இடத்திலேயே பலியான படையினருக்கு நினைவுத்தூபி**

[ வெள்ளிக்கிழமை, 07 மே 2010, 02:43.09 AM ] [ ]



தமிழீழ விடுதலைப்புலிகளின் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் சந்திரன் நினைவாக அமைக்கப்பட்ட சந்திரன் பூங்கா முற்றாக அழிக்கப்பட்டு அங்கு வன்னியில் உயிரிழந்த படையினரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி சிங்கள படைத்துறைச் செயலர் கோத்தபாய ராஜபக்சவினால் நேற்று திறக்கப்பட்டுள்ளது. [மேலும்]

www.tamilarangam.net

படைகளிடம் செல்வதற்கு விரும்பவில்லை. அரசாங்கம் அவர்களுக்கான மருந்துகளையும் உணவுப் பொருட்களையும் நிறுத்தியது. அவை இல்லாமல் மக்கள் மரணமடைந்தார்கள். நாம் மனிதர்களை ஒருபோதும் கேடயங்களாகப் பயன்படுத்துவதில்லை. அது தவறான தகவல். தவறான பிரச்சாரம்.

**பொதுமக்கள் வெளியே செல்வதைத் தடுப்பதற்காக விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள் என்ற செய்தியில் உண்மையில்லையா?**

உண்மையில் நாம் அவர்களைச் சுடவில்லை. துப்பாக்கிச் சண்டையின் இடையில் அவர்கள் அகப்பட்டிருக்கலாம். எமது மக்களை எதற்காக நாம் கொல்ல வேண்டும்?

**வன்னியில் உள்ள மக்களின் நிலை தொடர்பாக ஊடகங்களுக்குப் பேட்டிகளைக் கொடுத்துக்கொண்டிருந்த இரண்டு மருத்துவர்கள் காணாமல் போய்விட்டனரா?**

கடந்த இரவு ஒரு மருத்துவர் காயமடைந்தார். நாம் அவர்களை இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனுப்பிவைத்தோம். இப்போது நாம் அறியும் தகவலின்படி மருத்துவர்களில் ஒருவர் சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றார். மற்றவர் இராணுவ முகாமில் வைக்கப்பட்டுள்ளார்.

**போர் முடிவுக்கு வந்துவிட்டதா அல்லது மாற்றமடைகின்றதா?**

போர் முடிவடையலாம் அல்லது அரசியல் பாதையில் மாற்றமடையலாம். அடுத்த ஒரு சில மணிநேரங்களில் என்ன நடைபெறுகின்றது என்பதிலேயே இது தங்கியிருக்கின்றது. நாம் சொல்கின்றோம். ஆயுதங்களைக் கீழே போட விரும்புகின்றோம். எமது தேசத்துக்கு ஒரு அரசியல் தீர்வைக்காண விரும்புகின்றோம்.

முகப்பு Print Send Feedback




**செய்திகள்:** இந்தியா, தமிழகம், வணிகம், வீடியோ, கட்டுரைகள், நேர்காணல்

**பிந்திய 15 செய்திகள்**

- கொழும்பில் தமிழர்கள் வாழ்ந்து வந்த சட்டவிரோத வீடுகள் அரசினால் அகற்றம்
- 16வது வருடமாக சுவிசில் நடாத்தப்படும் வருடாந்தப் பொதுப்பரீட்சை
- கனடா வாழ் இளைஞர்களால் "மறவோம்" நிகழ்வு முன்னெடுப்பு
- ஆசிய பசுபிக் மாநாடு முதல் முறையாக இலங்கையில்
- சீன தொலைக்காட்சி சேவை இலங்கையில் இன்று ஆரம்பம்
- த.தே.கூட்டமைப்பிற்கு ஆதரவான அரச அதிகாரிகள் இடமாற்றம்: செல்வம் பா.உ. குற்றச்சாட்டு
- இலங்கை அரசின் போர் குற்ற விசாரணை ஆணைக்குழு மூலம் நியாயம் கிட்டுமா? : பிரட் அடம்ஸ்
- கைதிகள் மீதான தாக்குதல்: மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைக்கு உத்தரவு
- பயங்கரவாதத்தை தூண்டும் அமைப்புக்கள் மற்றும் நபர்களை உடனடியாக கைது செய்ய உத்தரவு
- வழங்கப்பட்ட தேசியப் பட்டியல் ஆசனங்களை விட்டுக்கொடுக்க முடியாது : மு.காங்கிரஸ்
- முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லமும் தகர்ப்பு
- அடிப்படைக் காரணத்தைக் கண்டுபிடித்து தீர்வு காணாவிடில் நல்லிணக்கம் ஏற்படாது சபையில் சம்பந்தன்
- மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடத்தில் இராணுவ முகாம்
- ஐ.தே.கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணையும் சாத்தியம்
- பொன்சேகா மீதான ஆயுத ஊழல் குற்றச்சாட்டு விசாரணைக்கு மூன்றாவது இராணுவ நீதிமன்றம்

**சிறப்புச் கட்டுரை**

**தம்மை அழித்தவர்களை ஈழத் தமிழர் பழிவாங்க வேண்டும் - நிராஜ் டேவிட்**

[ புதன்கிழமை, 05 மே 2010, 08:12.40 AM ]



ஈழத் தமிழர் மீதான அழித்தொழிப்பு யுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு ஒரு ஆண்டு நெருங்கிக்கொண்டிருக்கின்றது. ஈழத்தமிழ் இனத்தின் வரலாற்றில் என்றைக்குமே மறக்கமுடியாத நாட்கள் அவை. [மேலும்]

விளம்பரம்




**இணைப்புக்கள்**

**தமிழ்ச் செய்திகள்**
பி.பி.சி தமிழோசை
புதினம்
லங்காஸ்ரீ
சங்கதி
நிதர்சனம்
பதிவு
தமிழ்நாதம்
இன்போதமிழ்
சுவிஸ்செய்தி
இந்தியச் செய்தி
உலகச் செய்தி
விளையாட்டு
சினிமா
தொழில்நுட்பம்

**ஆங்கிலச் செய்திகள்**
Lankasri News
Lankawin
Tamilnet
Reuters
Tamil Canadian
MSNBC
Yahoo
BBC
Tamil Guardian
Google
Worldnews
CNN

**ஆடியோ செய்திகள்**
ஐ.பி.சி தமிழ்
பி.பி.சி தமிழோசை
புலிகளின் குரல்
உலகத்தமிழ்செய்தி

**வீடியோ செய்திகள்**
லங்காஸ்ரீ TV
Lankawin

**தமிழ் சஞ்சிகைகள்**
வீரகேசரி
தினக்குரல்
உதயன்
விகடன்
சுடர் ஒளி
குமுதம்
தினகரன்
தினத்தந்தி
விடுதலை
தினபூமி
தினமணி
மாலைச்சுடர்
தினமலர்
மாலைமலர்
எரிமலை
நக்கீரன்

எம்மைப் பற்றி
விளம்பரம் செய்ய
உங்கள் கருத்து
தொடர்புகளுக்கு
Web Feed
Archive

Copyright 2005-10 © **TamilWin.com**, All rights reserved. RSS 5 News RSS 10 News